Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.358/2021

**Depositions of PW- 1**

| | | | |
|---|---|---|---|
| Name | **திரு.செந்தில்** | Occupation | வனச்சரக அலுவலர் |
| Father's name | **ராமதாஸ்** | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of April 2026.

16.04.2026

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது கொடைக்கானலில் வனச்சரக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் திருவில்லிபுத்தூர் வனவராக பணிபுரிந்தபோது கடந்த 15.09.2012 அன்று வனப்பணியாளர்களுடன் திருவில்லிபுத்தூர் பிரிவு விரியன்கோவில் பீட் தட்டப்பாறை சரக பகுதியில் தணிக்கையின்போது எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் தட்டப்பாறை பட்டா பகுதியில் தணிக்கையின்போது ஒரு விலங்கை அடித்து இழுத்து சென்றதுபோல தடம் கண்டறியப்பட்டு அதனை பின்தொடர்ந்து சென்று பார்த்தபோது மண்குவியலுடன் ரத்தம் கலந்து கிடந்தது அறியப்பட்டது. அதன் அடிப்படையில் அந்த தோட்டத்தின் உரிமையாளரான அப்பையாநாயக்கர் என்வரை விசாரித்தபோது ஒரு ராஜநாகத்தை அடித்து புதைத்ததாக சொன்னதன் அடிப்படையில் அந்த இடத்திற்கு அருகிலிருந்த ஓடை பகுதிக்கு அருகில் கிளறி பார்த்தபோது ஒரு ராஜநாகத்தை அடித்து கொன்றது தெரியவந்தது. அது சம்மந்தமாக அவரிடம் விசாரித்தபோது அவர் ராஜநாகத்தை பார்த்தவுடன் கம்பை வைத்து அடித்து கொன்றதாக சொன்னார். அவர் தானே குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். **ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இடது பக்கம் முதல் கையெழுத்து அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் H நமுனா 031859 எண்ணை பூர்த்தி

செய்தேன். **H நமுனா அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் தட்டப்பாறை கிராம நிர்வாக அலுவலர் சுமதி, குருசாமி ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் தயார் செய்தேன். **பார்வை மகஜர் அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் எதிரியை வனச்சரக அலுவலகம் அழைத்து வந்து எதிரியை காரணம் கூறி கைது செய்த இரவு 09.30 மணியளவில் எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். இவ்வழக்கு சம்மந்தமான வழகது சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **படிவம் 91 அசாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் 18.09.2012 அன்று மம்சாபுரம் கால்நடை மருத்துவர் சுப்பிரமணி அவர்களிடம் உடற்கூறு செய்த அறிக்கை பெற்றேன். **பிரேத பரிசோதனை அறிக்கை அசாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் அன்றைய தினமே வன உயிரின காப்பாளர் மற்றும் வனப்பணியாளர்கள் முன்னிலையில் வனச்சரக அலுவலகத்திற்கு பின்னால் ராஜநாகத்தின் உடலை குழி தோண்டி பெட்ரோல் ஊற்றி எரித்தோம். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள ராஜநாகம் தான் எங்களால் மேற்படி தேதியில் கைப்பற்றப்பட்டதாகும். **ராஜநாகத்தின் புகைப்படம் சாபொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. (மேற்படி புகைப்படத்திற்கு பிரிவு.65B இந்திய சாட்சிய சட்டத்தின் கீழ் சான்று பெறாததால் எதிரி தரப்பில் வழக்கறிஞரால் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டு மேற்படி புகைப்படமானது ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது). என்னிடம் காட்டப்படும் வெள்ளைத்துவரை கம்பு தான் என்னால் மேற்படி தேதியில் கைப்பற்றப்பட்டதாகும். **வெள்ளைத்துவரை கம்பு சாபொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.